# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 17.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 2971/SCIC/2023**

திரு அகஸ்டியன் செல்லையா மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லாவரம் வட்டம். --- பொது அதிகார அமைப்பு

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 16.11.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம் வட்டம் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். சென்னை மாவட்டம் பல்லாவரம் தாலூகா புனித தோமையர் மலை கிராமத்தில் புலஎண்.1850க்கு பட்டா எண்.735 RPT No.4150/2010 நாள் 11.12.2010 ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா பெயர் மாற்றம் தொடர்பான 735 RPT No.4150/2010 நாள் 11.12.2010 கோப்பில் உள்ள அனைத்து ஆவணங்களையும் நகல்களையும் சான்றொப்பமிட்டு வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் 21.12.2022 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 31.01.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 2971/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 05.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 03.02.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 22.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது நேரடி விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 17.06.2025 தேதியிட்ட நேரடி விசாரணைக்கு ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் மனுதாரருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய நேரடி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு க. சசிகுமார், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம் வட்டம் ஆஜரானார்.

4. **மனுதாரரின் சட்டப்பிரிவுகள் 6(1) மற்றும் 19(1) கீழான மனுக்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோர்களால் எந்தவித தகவல்களும் மனுதாரருக்கு வழங்கப்படவில்லையென்பதால் அப்போது பொறுப்பிலிருந்த பொதுத் தகவல் அலுவலர் திரு சசிக்குமார், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் திருமதி சகுந்தலா, வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம் ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது என்பதற்கான அவர்களது விளக்கத்தினை மேற்படி அலுவலர்களிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் 31.07.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

5. பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலரால் 03.02.2025 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய பதிலில், புலஎண்.1850, பட்டா எண்.735 தொடர்பான பட்டா மாற்றம் குறித்த RPT No.4150/2010 கோப்பானது ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து தங்கள் அலுவலகத்திற்கு ஒப்படைப்பு

செய்யப்படவில்லையென்றும், மேற்படி கோப்பினை தங்கள் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு 31.10.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனைத்தொடர்ந்து ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மேற்படி கோப்பானது தங்கள் அலுவலகப் பதிவறையில் தேடிப்பார்த்தும் கிடைக்கப்பெறவில்லையென்று தெரிவித்து கடிதம் அளித்துள்ளதாகவும் அதன் நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மனுதாரர் தான் கோரிய பட்டா மாற்றத்திற்கான கோப்பானது ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இல்லையென்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது முரணானது என்றும் அதை ஏற்றுக்கொள்ள இயலாது என்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

7. எனவே, **மேற்படி நிகழ்வு குறித்து வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு). கிண்டி மற்றும் வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் ஆகியோர் மனுதாரர் கோரும் பட்டா மாற்றத்திற்கான கோப்பானது பல்லாவரம் மற்றும் ஆலந்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எவ்வாறு காணாமல் போனது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளுமாறும், மேலும் அக்கோப்பினை தேடிக் கண்டுபிடிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றை 05.08.2025 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு), கிண்டி மற்றும் வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது,**

8. **அவ்வாறு மனுதாரர் கோரும் கோப்பானது மேற்படி அலுவலகங்களில் தேடிக் கண்டுபிடிக்க இயலவில்லையெனில் அதற்கு பொறுப்பான அலுவலர் யார் என்பதைக் கண்டறிந்து அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அதுகுறித்த அறிக்கையினை 05.08.2025 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறும் வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு), கிண்டி மற்றும் வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கானது 05.08.2025 தேதிக்கு மறுவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

9. ஆணையத்தின் 05.08.2025 தேதியிட்ட மறுவிசாரணை குறித்து மனுதாரர், ஆலந்தூர் மற்றும் பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு), கிண்டி. வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து அழைப்பாணைகள் அனுப்பப்படவேண்டும். மேலும் மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனு மற்றும் 03.02.2025, 30.08.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு அனுப்பிய பதில் கடிதங்கள் ஆகியவை வருவாய் கோட்டாட்சியர், சென்னை (தெற்கு)

கிண்டி மற்றும் வருவாய் கோட்டாட்சியர், தாம்பரம் ஆகியோர்களுக்கு அழைப்பாணையுடன் இணைத்தனுப்பப்படவேண்டும்.

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2971/SCIC/2023</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
சென்னை (தெற்கு), கிண்டி (இணைப்புடன்)

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம். (இணைப்புடன்)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லாவரம், சென்னை

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஆலந்தூர், சென்னை

திரு சசிக்குமார்,
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பல்லாவரம்.
செங்கல்பட்டு மாவட்டம்.

திருமதி சகுந்தலா,
முன்னாள் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லாவரம், செங்கல்பட்டு மாவட்டம்.

**மனுதாரர்:-**
திரு அகஸ்டியன் செல்லையா,
நெ 111-A, வெள்ளி தெரு, பட்ரோடு,
புனித தோமையர் மலை,
சென்னை 600 016

**நகல்**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

Copy to: File TK/PS